கிறிஸ்தவ மதமும், மேலை நாடுகளும் ஓரினச் சேர்க்கை பற்றி அந்தக் காலத்தில் எவ்வகையான கண்ணோட்டம் கொண்டிருந்தன என்று சென்ற இதழில் பார்த்தோம். அந்தக் காலகட்டத்திலும் அதற்கு முந்தைய காலகட்டத்திலும், ஓரினச் சேர்க்கை குறித்து நம் இந்திய தேசத்தில் எந்தவிதமான அபிப்பிராயங்கள் நிலவின? இந்தக் கேள்விக்கான பதில் நிச்சயம் உங்களை ஆச்சர்யப்படுத்தும்!

கிழக்கிந்திய கம்பெனி என்ற வர்த்தகப் போர்வையில் வந்து நம்மை அடிமைப்படுத்திய ஆங்கிலேயர்கள் வருகைக்கு முன்பு வரை, ஓரினச் சேர்க்கையை ஆட்சேபணைக்குரிய உறவாகவோ, பாவகரமான குற்றமாகவோ இந்திய தேசம் பார்க்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், நம் பழங்கால நூல் களில் ஓரினச்சேர்க்கை பற்றி நிறைய சொல்லப்பட்டிருக்கிறது. மனுதர்ம சாஸ் திரத்தில்கூட தண்டிக்கப்பட வேண்டிய, கண்டிக்கப்பட வேண்டிய இழிவான செயலாக சொல்லப்படவில்லை. ஓரினச்சேர்க்கை என்பதை எதிர்க்கவும் செய்யாமல் ஆதரிக்கவும் செய்யாமல், உறவுகளின் விசித்திரங்களில் இதுவும் ஒன்று என்ற மனோநிலையில்தான் நம் மூதாதையர்கள் இருந்திருக்கின்றனர். இதற்கு சரியான எடுத்துக்காட்டு, 'ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்ட பிறகு அதில் ஈடுபட்டவர்கள் குளித்து விட்டால் போதும்' என்று மனுதர்மம் சொல்வதுதான்!


டாக்டர்
நாராயண ரெட்டி

இந்திய நீதி நூலாசிரியர்கள்கூட ஓரினச் சேர்க் கையைப் பற்றி எதிர்மறையான கருத்துக்களைத் தங்கள் நூல்களில் குறிப்பிடவில்லை. ஒரு விஷயத்தை முக்கியமாக யோசிக்க வேண்டும். மனுதர்ம காலம் என்பது வேத காலம். வர்ணங்களின் அடிப்படையில் மக்களைப் பேதப்படுத்தி ஏற்றத்தாழ்வுகளும், புறக்கணிப்புகளும் மண்டிக்கிடந்த அந்தக் காலத்தில் கூட ஓரினச் சேர்க்கையைப் பற்றிய தவறான கண்ணோட்டம் இருந்ததில்லை என்பதுதான் அந்த முக்கியமான விஷயம்.

ஆனால், வாத்ஸ்யாயனரின் 'காம சாஸ்திர'த்தில் ஓரினச்சேர்க்கையாளர்களின் திருமணம் பற்றி குறிப்பிடப்பட்டிருப்பதை இத்தருணத்தில் சுட்டிக் காட்டியே தீரவேண்டும். அக்காலத்தில் எட்டு வகையான திருமணங்கள் நடைமுறையில் இருந்திருக்கின்றன. அவற்றில் 'காந்தர்வ விவாஹம்' என்றழைக்கப்பட்ட காதல் திருமணமும் ஒன்று. வாத்ஸ்யாயனர் குறிப்பிடும் இந்தக் காந்தர்வ விவாஹ முறைப்படி ஒரு ஆணும் ஒரு பெண்ணும் மட்டுமல்ல, ஆணும் ஆணும் அல்லது பெண்ணும் பெண்ணும்கூட இணை சேரலாம்!

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டு வரைக்கும்கூட இந்தியாவில் ஓரினச்சேர்க்கை ஒரு பிரச்னையாகவே கருதப்படவில்லை. ஆங்கி லேயர்கள் நம்மை ஆட்சி செய்யத் துவங்கிய பிறகுதான் ஓரினச்சேர்க்கை என்பது மிகப்பெரிய பிரச்னையாகக் கருதப்பட்டது.




ஆங்கிலேயர்கள் தங்களின் பயன்கருதி, அந்நாளைய சூழல்களுக்கு ஏற்ற வகையில் சட்ட விதிகளை உருவாக்கி ஒவ்வொரு இந்தியனின் தலையிலும் சுமத்தினார்கள் என்பது மறைக்கவும், மறுக்கவும் முடியாத வரலாறு. 1837-ம் ஆண்டில் மெக்காலே (Lord Macaulay) என்ற அதிகாரவர்க்கத்தின் பிரதிநிதியான ஆங்கிலேயரால்தான், முதன்முதலாக இந்திய சட்டவிதிகள் (இந்தியன் பீனல் கோட்) தயாரிக்கப்பட்டது. இதன்படி இ.பி.கோ. செக்ஷன் 377-ல் ‘ஹோமோ செக்ஸ் இயற்கையான வழிமுறைகளுக்கும், இயல்பான செக்ஸ் செயல்பாடுகளுக்கும் எதிரானது’ என்று சொல்லப்பட்டு, தண்டனைக்குரிய ஒரு குற்றமாக அறிவிக்கப்பட்டது.

இந்திய சட்டம், ஹோமோ செக்ஸைக் குற்றமாகக் கருதுவது ஒருபுறமிருக்கட்டும். ஒரு மனிதன் ஏன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுகிறான்? இது அவ்வளவு சுலபத்தில் பதில் சொல்ல முடியாத கேள்வி.

ஒரு மனிதன் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவது குறித்து நான்கு வகையான கருத்தாக்கங்கள் இருக்கின்றன.

**1.ஜெனடிக் தியரி**: இதன்படி ஓரினச் சேர்க்கை என்பது ஜீன்களின் கோளாறினால் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், இதனை மருத்துவ உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

**2.ஹார்மோன் தியரி:** கர்ப்பத்தின்போது தாயின் ஹார்மோன் கோளாறினால் குழந்தைக்கு ஓரினச் சேர்க்கை விருப்பம் வருகிறது என்று சொல்லப்பட்டது. எனினும் குழந்தையின் ஹார்மோனை பரிசோதித்த மருத்துவ உலகம், இதற்கான எந்த நிரூபணமும் இல்லாததைக் கண்டறிந்து இதனையும் மறுதலித்தது.

**3.சைக்கோ அனலிடிக்கல் தியரி:** இதன்படி குழந்தைப் பருவத்தில் நெருக்கடியான சூழலில் வளரும்போது, மன பாதிப்பின் காரணமாக ஓரினச் சேர்க்கையின் மீது நாட்டம் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கோட்பாட்டையும் மருத்துவ உலகம் பரிசீலனை செய்தது. ஓரினச் சேர்க்கையாளர்களின் வீட்டுச்சூழலும், பெற்றோர் களும் நெருக்கடியற்ற நிலைமையில் இருந்தது கண்டறியப்பட்டு, இக்கோட்பாட்டையும் மருத்துவ உலகம் புறந்தள்ளியது.

**4.பியர் இன்ஃபுளுயன்ஸ் தியரி** (Peer influence theory): இதன்படி ஒரு குழுவில் இருக்கும் பெரும்பாலோருக்கு ஓரினச்சேர்க்கை மீது ஈடுபாடு இருந்தால், ஈடுபாடற்ற மற்றவர்களும் ஓரினச் சேர்க்கை யாளர்களாக மாறுவார்கள் என்று சொல்லப்பட்டது. இதனையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில், இயற்கையான இருபால் சேர்க்கையில் (ஆணும் பெண்ணும் கூடும் இயல்பான செக்ஸில்) விருப்பம் உள்ளவர்கள் எந்தக் குழுவில் இருந்தாலும் அவர்களுக்கு ஓரினச் சேர்க்கை யின் மீது துளியும் விருப்பம் ஏற்படாது என்பதே உண்மை. அப்படியிருக்க, ஒருவரைப் பார்த்து இன்னொருவருக்கு ஹோமோசெக்ஸ் விருப்பம் ஏற்படும் என்பதை எப்படி ஏற்றுக் கொள்வது?

மேலே சொன்ன நான்கு கோட்பாடுகளும் யூகத்தின் அடிப்படையிலும், கற்பனையின் அடிப்படையிலுமே உருவானவை என்பதை மருத்துவ உலகம் இந்த நூற்றாண்டில் நிரூபித்து விட்டது.

இருப்பிட சூழல் காரணமாக, சில வேளை களில் ஒருசிலர் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடு வது இன்றும் தொடர்கதையாகத்தான் உள்ளது. சிறைக்கூடம், விடுதிகள், ராணுவ முகாம்கள், கப்பல் போன்றவற்றில் குடும்பத்தை, மனைவியைப் பிரிந்து வாழும் சிலர் தனிமையின் வெப்பத்தைத் தணித்துக்கொள்ள ஓரினச்சேர்க்கை என்ற நிழலில் ஒதுங்குவது உண்டு. இதற்கு ஹோமோ செக்ஸுவல் எக்ஸ்பீரியன்ஸ் என்று பெயர். இவர்களை ஓரினசேர்க்கையாளர்கள் என்று கூறிவிட முடியாது. ஏனெனில் தனிமையிலிருந்தும், சந்தர்ப்பவசத்தால் ஏற்பட்ட இடச் சூழலிருந்தும் இவர்கள் விடுபட்ட பிறகு இவர்களிடம் ஓரினச்சேர்க்கை விருப்பம் தொடர்ந்து இருப்பதில்லை.

பிறந்த ஒவ்வொரு மனிதனும் ஆண்-பெண் சங்கமத்தில் இயற்கையான விருப்பத்துடன் ஈடுபடுவதைப் போல - ஹோமோ செக்ஸ் பிரியர்கள் பிறவியிலேயே ஓரினச் சேர்க்கை விருப்பத்துடனேயே வளர்கிறார்கள். இதுவொரு விசித்திர குணாதிசயம்!

இது எதனால் என்று இதுவரை கண்டறியப் படவில்லை என்பதுதான் நிஜம். ஹோமோசெக்ஸ் பிரியர்களை பாவப்பட்டவர்கள், குற்றவாளி கள், தவறானவர்கள் என்று கருதக்கூடாது. அவர்களுக்கே தாங்கள் ஏன் இப்படிச் செயல் படுகிறோம் என்பது புரியாத புதிராகத்தான் இருக்கிறது.

ஒருவேளை ஹோமோசெக்ஸ் பிரியர்களை குற்றவாளிகள் என்றோ, பாவப்பட்டவர்கள் என்றோ கருதினால்... அந்தக் குற்றத்தையும், பாவத்தையும் கடவுளின், இயற்கையின் தலையில்தான் சுமத்த வேண்டும். ஆம், ‘இது காலம்

செய்த கோலமடி, கடவுள் செய்த குற்றமடி' என்று உள்ளுக்குள் அவர்கள் புழுங்குவது யாருக்குத் தெரியும்?

பொதுவாகவே, ஹோமோசெக்ஸ் பற்றிய உண்மைகளை அறியாததினால் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடு பவர்களை குற்றவாளிகளாக, தவறானவர்களாக மக்கள் கருதுகிறார்கள். அது தவறு..!

(உயிர் வளரும்...)